ஸ்ரீ:

RECEIVED
8 - AUG 196



திவ்யப்ரபந்த பாசுரப்படி

# ராமாயணம்

பரமகாருணிகரான

பெரியவாச்சான்பிள்ளை

அருளிச்செய்தது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் க்ருஷ்ணஸூரயே நம:

TANJORE

பரமகாருணிகரான

பெரியவாச்சான்பிள்ளை அருளிய

## திவ்யப்ரபந்த பாசுரப்படி

# ராமாயணம்

[ ஸ்ரீஸூக்திமாலா மலர் 15 ]

பதிப்பாசிரியர்:—


**ஸ்ரீS. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,**

அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.


விலை இல்லை.

தபாற்கூலி 10 ந. பை.

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர், திருச்சி.

# முகவுரை

இந்நூலை அருளிச்செய்த 'கிருஷ்ணஸூரி' என்னும் பெரியவாச்சான்பிள்ளை (கி. பி. பனிரண்டாம் நூற்றுண்டில்) ஒரு ஸர்வஜித் வருஷத்தில் ஆவணியில் ரோஹிணியில் ஸ்ரீஜெயந்தியன்று பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மணோத்தம குலத்தில் ஸ்ரீயாமுநதேசிகர்க்கும், நாச்சியாரம்மாளுக்கும் ஸ்ரீக்ருஷ்ணனின் அம்சாவதாரமாய்த் தோன்றியவர். நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களுக்கும் ஸ்ரீராமாயணத்தில் முக்கியமான சுலோகங்களுக்கும் வியாக்கியான மருளிச்செய்த பேராசிரியர் இவரே. திவ்ய ப்ரபந்த ஸ்ரீஸூக்திகளைக்கொண்டே ஸ்ரீராமாயணக் கதையைத் தெரிவிக்கும் இந்நூலைப் பாராயணம் செய்தால் திவ்ய ப்ரபந்தங்களையும் ஸ்ரீராமாயணத்தையும் சேர்த்துப் பாராயணம் செய்த பயனைப்பெறலாம் என்பது பக்தர்கள் கண்ட முடிவு. இஃது விலையில்லா மாணிக்கமாக வெளியாகிறது.

*26—3—58*
ஹேவிளம்பி
பங்குனி ரோகிணியில்

**ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி தாஸன்.**

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திவ்யப்ரபந்த பாசுரப்படி

# ராமாயணம்

தனியன்

ஸ்ரீமத் க்ருஷ்ண ஸமாஹ்வாய
நமோ யாமுநஸூநவே।
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம்
ஸுலப₄: ஸ்ரீத₄ர: ஸதா₃॥

## பாலகாண்டம்

* திருமடந்தை மண்மடந்தை இருபாலுந் திகழ, நலமந்தமில்லதோர் நாட்டில், அந்தமில் பேரின்பத் தடியரோடு ஏழுலகுந் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும் அயர்வறு மமரர்களதிபதியான அணியார் பொழில்சூழ் அரங்கநகர் அப்பன் அலைநீர்க் கடலுள் அழுந்தும் நாவாய் போல் ஆவாரார் துணை என்று துளங்கும் நல்லமரர் துயர்தீர, வல்லரக்கர் வாழிலங்கை பாழ்படுக்க வெண்ணி, மண்ணுலகத்தோருய்ய, அயோத்தி

யென்னும் அணிநகரத்து வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய். கௌசலை தன் குல மதலையாய்த் தயரதன் தன் மகனாய்த்தோன்றி குணந்திகழ் கொண்டலாய், மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்விகாக்க நடந்து, வந்து எதிர்ந்த தாடகைதன் உரத்தைக்கீறி வல்லரக்கர் உயிருண்டு, கல்லைப்பெண்ணாக்கி, காரார் திண் சிலையிறுத்துமைதிலியை மணம் புணர்ந்து, இருபத்தொருகால் அரசுகளைகட்ட மழுவாளிவெவ்வரிநற் சிலை வாங்கி வென்றிகொண்டு, அவன் தவத்தை முற்றுஞ்செற்று, அம்பொனெடு மணிமாட அயோத்தி எய்தி, அரியணை மேல் மன்னனாவான் நிற்க;

## அயோத்யாகாண்டம்

* கொங்கை வன் கூனி சொற்கொண்ட கொடிய கைகேயி வரம் வேண்ட, அக்கடிய சொற்கேட்டு, மலக்கிய மாமனத்தினனாய் மன்னவனும் மறுதொழிய, 'குலக்குமரா! காடுறையப்போ' என்று விடைகொடுப்ப, இருநிலத்தை வேண்டாது ஈன்றெடுத்த தாயரையும் இராச்சியமும் ஆங்கொழிந்து மை வாய களிறொழிந்து

மாவொழிந்து தேரொழிந்து, கலனணியாதே காமரெழில் விழலுடுத்து, அங்கங்கள் அழகுமாறி மானமரும் மென்னோக்கி வைதேவி இன்துணையா இளங்கோவும் வாளும் வில்லுங்கொண்டு பின் செல்ல, கலையுங் கரியும் பரிமாவுந் திரியுங் கானங் கடந்துபோய், பத்தியுடைக் குகன் கடத்தக் கங்கை தன்னைக் கடந்து, வனம்போய்ப் புக்கு, காயோடு நீடு கனியுண்டு, வியன்கான மரத்தி னீழல் கல்லணைமேற் கண்துயின்று, சித்திரகூடத் திருப்ப, தயரதன் தான், 'நின்மகன்மேற் பழி விளைத்திட்டு என்னையும் நீள் வானிற்போக்க என்பெற்றாய் கைகேசி! நானும் வானகமே மிக விரும்பிப்போகின்றேன்' என்று வானேற, தேன மரும் பொழிற் சாரற் சித்திர கூடத்து, ஆனைப் புரவித்தேரொடு காலாளணிகொண்ட சேனை சுமந்திரன் வசிட்டருடன் பரதநம்பி பணிய, தம்பிக்கு மரவடியை வான் பணயம் வைத்து, குவலயத் துங்கக்கரியும் பரியு மிராச்சியமும் எங்கும் பரதற்கருளி விடைகொடுத்து, செரு வுடைய திசைக்கருமந் திருத்தப்போய்த் தண்ட காரணியம் புகுந்து;

# ஆரண்யகாண்டம்

* மறைமுனிவர்க்கு 'அஞ்சேன் மீன்' என்
றருள் கொடுத்து, வெங்கண் விறல் விராதன்
உக வில்குனித்து. வண் தமிழ் மாமுனி கொடுத்த
வரிவில் வாங்கி புலர்ந்தெழுந்த காமத்தால்
சீதைக்கு நேராவனென்ற பொன்னிறங்கொண்ட
சுடுசினத்த சூர்ப்பணகி. கொடிமூக்கும் காதி
ரண்டும் கூரார்ந்த வாளால் ஈராவிடுத்து. கர
னோடு தூடணன் தன் உயிரை வாங்க. அவள்
கதறித் தலையில் அங்கை வைத்து மலையிலங்கை
ஓடிப்புக. கொடுமையிற் கடுவிசை யரக்கன்
அலைமலி வேல்கணளை அகல்விப்பான் ஒருருவாய
மானை யமைத்து. செங்கற் பொடிக்கூறை சிற்
றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டத்த
னாய் வஞ்சித்து. இலைக்குரம்பில் தனியிருப்பில்
கனிவாய்த் திருவினைப் பிரித்து. நீள் கடல் சூழ்
இலங்கையில் அரக்கர் குடிக்கு நஞ்சாகக்கொண்டு
போய் வம்புலாங் கடிகாவில் சிறையா வைக்க.
அயோத்தியர் கோன் மாயமான் மாயச்செற்று.
அலைமலிவேற் கணளை அகன்று தளர்வெய்திச்

சடாயுவை வைகுந்தத்தேற்றி, கங்குலும் பக லுங் கண் துயிலின்றிக் கானகம் படியுலாவி யுலாவி, கணையொன்றினாற் கவந்தனை மடித்து, சவரி தந்த கனியுவந்து;

## கிஷ்கிந்தாகாண்டம்

வனமருவு கவியரசன் தன்னோடு காதல் கொண்டு, மராமர மேழெய்து, உருத்தெழு வாலி மார்பில் ஒருகணை உருவவோட்டிக் கருத் துடைத் தம்பிக்கு இன்பக் கதிர்முடி அரசளித்து வானரக்கோனுடனிருந்து, வைதேகிதனைத் தேடவிடுத்த திசைக்கருமந் திருத்தத் திறல் விளங்கு மாருதியும் மாயோன் தூதுரைத்தல் செப்ப;

## ஸுந்தரகாண்டம்

* சீராருந் திறலனுமன் மா கடலைக் கடந் தேறி மும்மதில் நீளிலங்கை புக்கு, கடிகாவில் வாராரு முலை மடவாள் வைதேகிதனைக் கண்டு நின்னடியேன் விண்ணப்பங் கேட்டருளாய்;

அயோத்திதன்னில் ஓரிடவகையில் எல்லீயம் போதினி திருத்தல் மல்லிகை மாமாலை கொண் டங் கார்த்ததும், கலக்கிய மா மனத்தினளாய்க் கைகேயி வரம் வேண்ட, மலக்கியமா மனத்தன னும் மன்னவனும் மறுமொழிய 'குலக்குமரா! காடுறையப்போ' வென்று விடைகொடுப்ப, இலக்குமணன் தன்னோடு அங்கேகியதும், கங்கை தன்னிற் சூரணிந்த வேல்வலவன் குகனோடு சீர ணிந்த தோழமை கொண்டதுவும், சித்திர கூடத் திருப்பப் பரத நம்பி பணிந்ததுவும், சிறு காக்கை முலை தீண்ட மூவுலகுந் திரிந்தோடி, வித்தகனே! இராமா! ஓ! நின்னபயமென்ன, அத்திரமே அதன் கண்ணை அறுத்ததுவும், பொன் னொத்த மானொன்று புகுந்தினிது விளையாட, நின்னன்பின் வழிநின்று சிலை பிடித்து எம்பிரா னேகப் பின்னேயங்கு இலக்குமணன் பிரிந்தது வும், அயோத்தியர்கோன் உரைத்த அடையாளம் ஈது அவன் கை மோதிரமே' என்று அடையாளந் தெரிந்துரைக்க, மலர்க்குழலாள் சீதையும் வில்லிறுத்தான் மோதிரங்கண்டு, 'அனுமான்! அடையாளம் ஒக்கும்' என்று உச்சிமேல் வைத்து

உகக்க. திறல் விளங்கு மாருதியும் இலங்கையர் கோன் மாக்கடிகாவை இறுத்துக்காதல் மக்களும் சுற்றமும் கொன்று கடியிலங்கை மலங்க எரித்து. அரக்கர்கோன் சினமழித்து மீண்டு. அன்பினுல் அயோத்தியர் கோன் தளிர்புரையும் அடியிணை பணிய:

## யுத்தகாண்டம்

* கானவெண்குங் குரங்கும் முசுவும் படையாக் கொடியோ னிலங்கை புகலுற்று அலையார் கடற்கரை வீற்றிருந்து செல்வ விபீடணற்கு நல்லனுய் விரிநீரிலங்கை அருளி. சரண்புக்க குரைகடலை அடலம்பால் மறுக வெய்து, கொல் விலங்குபணிசெய்ய. மலையாவணைகட்டி மறுகரை யேறி இலங்கை பொடிபொடியாகச் சிலைமலி செஞ்சரங்கள் செலவுய்த்து. கும்பனேடு நிகும் பனும் பட. இந்திரசித்தழியக் கும்பகரணன் பட.அரக்காரவிமாள. அரக்கர்கூத்தர்போலக்குழ மணி தூரமாட இலங்கை மன்னன் முடியொரு பதும் தோளிருபதும் போயுதிரச்சிலைவளைத் துச் சரமழைபொழிந்து வென்றிகொண்டசெருக்

களத்துக்கடிக் கமலநான்முகனும் கண்மூன்றத் தானும் எண்மர் பதினொருவர் ஈரறுவர் ஓரிருவர் மற்றுமுள்ள வானவர் மலர் மழை பொழிந்து. மணிமுடிபணிதரஅடியிணை வணங்க. கோலத் திருமா மகளோடு. செல்வ விபீடணன் வானரக் கோனுடன் இலகுமணி நெடுந்தேரேறி. சீர ணிந்த குகனோடு கூடி, அங்கணெடு மதில் புடை சூழ் அயோத்தி எய்தி. நன்னீராடிப் பொங்கிள வாடை அரையிற்சாத்தி. திருச்செய்ய முடியும் ஆரமும் குழையும் முதலா மேதகு பல்கல னணிந்து, சூட்டு நன் மாலைகளணிந்து, பரதனும் தம்பி சத்துருக்கனனும் இலக்குமனும் இரவு நன்பகலும் ஆட்செய்ய, வடிவிணையில்லாச் சங்கு தங்கு முன்கை நங்கை மலர்க்குழலாள் சீதை யுந்தானும் கோப்புடைய சீரிய சிங்காசனத் திருந்து ஏழுலகுந் தனிக்கோல் செல்ல வாழ்வித் தருளினர்.

**பாசுரப்படி ராமாயணம் நிறைவுபெற்றது.**

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

—●—

# ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு முதலானவற்றோடு கூடிய பெரியவாச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களின் க்ரந்தங்கள்.

| க்ரந்தங்கள் | விலை | தபால் |
|---|---|---|
| 1. பரந்த ரஹஸ்யம் முதலிய எட்டு ரஹஸ்யங்கள் | 1·50 | ·25 |
| 2. ஸ்தோத்ரரத்ந சது:ச்லோகீ ஜிதந்தே வ்யாக்யானங்கள் | 3·00 | ·45 |
| 3. திருப்பல்லாண்டு வ்யாக்யானம் | 1·50 | ·25 |
| 4. முதல் திருவந்தாதி வ்யாக்யானம் | 1·88 | ·30 |
| 5. பெருமாள் திருமொழி வ்யாக்யானம் | 1·88 | ·30 |
| 6. திருமாலை வ்யாக்யானம் | 2·75 | ·40 |
| 7. திருவாசிரியம் பெரியதிருவந்தாதி வ்யாக்யானம் | 1·63 | ·30 |
| 8. சது:ச்லோகீ வ்யாக்யானம் (நாயனாராச்சான்பிள்ளை) | 1·50 | ·25 |
| 9. கத்ய வ்யாக்யானங்கள் | 2·00 | ·37 |
| 10. நாச்சியார்திருமொழி வ்யாக்யானம் | 4·00 | ·60 |
| 11. திருச்சந்தவிருத்த வ்யாக்யானம் | 3·00 | ·45 |

| | | | |
|---|---|---|---|
| 12. | நான்முகன்திருவந்தாதி வ்யாக்யானம் (விவரணத்துடன்) | 2-50 | -40 |
| 13. | ஸ்ரீராமாயண தனிச்லோகம்(விவரணத்துடன்) I Part. | 3-50 | -55 |
| | ஷை இரண்டாம்பாகம் (விவரணத்துடன்) | 7-00 | 1-00 |
| 14. | திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம் | 0-50 | -10 |
| 15. | பாசுரப்படி ராமாயணம் (விலையில்லை தபால்கூலி 0-10) | | |
| 16. | அமலனுதிபிரான் வ்யாக்யானங்கள் | 1-88 | -30 |
| 17. | கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யானம் | 2-75 | -40 |
| 18. | சிறியதிருமடல் வ்யாக்யானம் (விவரணத்துடன்) | 1-38 | -25 |
| 19. | முமுக்ஷுப்படி வ்யாக்யானம் | 2-50 | -37 |
| 20. | பெரியதிருமடல் வ்யாக்யானம் (விவரணத்துடன்) | 1-50 | -25 |
| 21. | முதல் திருவந்தாதி,அப்பிள்ளையுரை,விவரணத்துடன் | 3-00 | -45 |

## ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. திருப்பாவை வ்யாக்யானம் | 3·00 | ·45 |
| 2. (போதாயந) ஸந்த்யாவந்தநம் பதவுரையுடன் | 0·31 | ·10 |
| 3. (போதாயந) உபாகர்மவிதி | 0·31 | ·10 |
| 4. புருஷஸூக்த வ்யாக்யானம் | 0·75 | ·15 |
| 5. நாராயணஸூக்த வ்யாக்யானம் | 0·75 | ·13 |
| 6. ஸ்ரீஸூக்த வ்யாக்யானம் | 1·50 | ·38 |
| 7. பூ நீளா விஷ்ணுஸூக்த வ்யாக்யானங்கள் | 1·75 | ·38 |
| 8. தேஹளீச ஸுப்ரபாதம் | 0·25 | ·15 |
| 9. கம்பராமாயணம் (கையடைப்படலம் முடிய) | 2·50 | ·41 |
| 10. ராமாநுஜதேசிக ஸ்தோத்ரங்கள் | 1·00 | ·18 |
| 11. பாகவத தசமஸ்கந்த கீர்த்தனை பூர்வபாகம் | 4·00 | 1·00 |
| ஷை உத்தரபாகம் | 4·00 | 1·00 |
| 12. ஸ்ரீகேசவ மணிமாலை | 0·50 | ·10 |
| 13. ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹஸ்தவம் | 0·37 | ·10 |
| 14. யதிராஜவிம்சதி வ்யாக்யானம் | 0·88 | ·15 |
| 15. ஸந்மதகாரிகாவளீ | 1·75 | ·38 |
| 16. விஷ்ணுசித்தவிஜயம் முதல் பாகம் | 5·00 | ·75 |
| ஷை இரண்டாம்பாகம் (அச்சில்) | 7·00 | 1·00 |

கிடைக்குமிடம்:- S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

# ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

**(பூர்வாசார்ய க்ரந்தங்கள்)**

திவ்யப்ரபந்தங்களுக்கு எளிய தமிழ் வ்யாக்யானங்கள்.

*கிடைக்குமிடம்:—*

**ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,**

ஆசிரியர்:

**ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்**

*3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சிறந்த ஸ்ரீவைஷ்ணவ மாதப்பத்திரிகை

ஆசிரியர்:

**ஸ்ரீ. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,**

**அட்வேகேட்,**

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

**வருடச்சந்தா ரூ. 4-00.**

குரோதி மார்கழி முதல் 18-வது வருடம் நடக்கிறது.

ஸ்ரீநிவாஸம் பிரஸ்
புத்தூர் அக்ரஹாரம்,
திருச்சி.